

தஞ்சாவூர் மாநகராட்சி பேரறிஞர் அண்ணாநூற்றாண்டு அரங்கில் அமைச்சர் முனைவர் கோவி.செழியன் கலைஞர் உரிமைத் தொகைக்கான (ஏடிஎம் கார்டு) பற்று அட்டைகளை பயனாளிகளுக்கு வழங்கினார். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பா.பிரியங்கா பங்கஜம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), டி.கே.ஜி. நீலமேகம் (தஞ்சாவூர்), க.அன்பழகன் (கும்பகோணம்), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), என்.அசோக்குமார் (பேராவூரணி),முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.ராமலிங்கம், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண். இராமநாதன், துணை மேயர்கள் மரு.அஞ்சுகம் பூபதி (தஞ்சாவூர்), சுப.தமிழழகன் (கும்பகோணம்), மாவட்ட வருவாய் அலுவலர்கள் தெ.தியாகராஜன், திருமதி.வேலுமணி அவர்கள் (தேசிய நெடுஞ்சாலை) மற்றும் பலர் உடன் உள்ளனர்.



நாகை மாவட்டம் அரசு மருத்துவக்கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்ற விழாவில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவருமான என்.கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், ஆகியோர் உரிமைத் தொகை பெறும் மகளிர்களுக்கு வங்கி ஏ.டி.எம் கார்டினை வழங்கினார்கள். உடன் தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. இராஜேந்திரன், மாநில மீனவர் அணி துணை செயலாளர் ஜி. மனோகரன், நாகை தெற்கு ஒன்றிய கழக துணை செயலாளர் திருநாவுக்கரசு ஆகியோர் உள்ளனர்.

### தமிழ்நாட்டு மக்களை பெரிதும் கொந்தளிக்க வைத்துள்ள

# கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களை நிராகரித்த காரணம் என்ன?

## ஒன்றிய அரசுக்கு கே.இ.பிரகாஷ் நாடாளுமன்றத்தில் கேள்வி!

புதுடெல்லி, டிச.14-

மக்களவையில் ஈரோடு தொகுதி கழக உறுப்பினர் கே.இ.பிரகாஷ் எழுப்பிய கேள்வி வருமாறு:-

கோவை மற்றும் மதுரைக்கு மெட்ரோ ரயில் கொண்டுவருவதற்கான தமிழ்நாடு அரசின் பரிந்துரையை நிராகரித்தது ஏன் என்று, ஒன்றிய அரசிடம் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினேன். இதில், கோவை, மதுரைக்கு மெட்ரோ நிராகரிக்கப்பட்ட நிலையில், எப்படி அதே போன்ற ஆக்ரா, போபால், இந்தூர், நாக்பூர் நகரங்களுக்கு மட்டும் ஒப்புதல் அளிக்கப்பட்டது என்று வினவியிருந்தேன்.

தமிழ்நாட்டு மக்களை பெரிதும் கொந்தளிக்க வைத்துள்ள இந்த விவகாரத்தில், ஊடகங்களில் பேசுவதைப் போல் அல்லாமல் நாடாளுமன்றத்திலேனும் சரியான, நியாயமான பதிலை ஒன்றிய அரசு அளிக்கும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால், மீண்டும் இட்டுக்கட்டிய பொய்கள் மற்றும் உதவாத முன்முடிவுகளையே பதிலாக அளித்துள்ளது ஒன்றிய அரசு.

**தந்திரமான பதில்; சுதந்திரமான**



**ஆய்வுக்கும் உடன்பாடில்லை!**

கோவை, மதுரைக்கான மெட்ரோ ரயில் திட்டங்களை நிராகரித்ததற்கான காரணங்களில், தந்திரமாக 'மக்கள் தொகை 20 லட்சத்திற்கும் குறைவாக இருக்கிறது' என்ற வார்த்தையை தவிர்த்திருக்கிறது ஒன்றிய அரசு. இதைக் குறிப்பிட்டால், கோவை, மதுரை போன்றே மக்கள் தொகை கொண்ட ஆக்ரா, போபால், இந்தூர், நாக்பூர் போன்ற நகரங்களுக்கு மட்டும் மெட்ரோவுக்கு அனுமதி அளித்தது எப்படி என்பதை அவர்கள் சொல்லியாக வேண்டும்.

மாநில அரசு குறிப்பிட்ட அளவு மக்கள் பயணிக்க மாட்டார்கள், மாநில அரசு குறிப்பிட்ட இடங்களில் இருந்து மக்கள் வரமாட்டார்கள், மெட்ரோ அமைக்க வழிகள் இல்லை, இந்த மக்கள்தொகைக்கு பேருந்து சேவையே போதும் என, அடுக்கடுக்கான பொய்களையும் முன்முடிவுகளையுமே காரணங்களாக அடுக்கியிருக்கிறார்கள்.

இதை முன்கூட்டியே உணர்ந்து தான், தமிழ்நாடு அரசு அளித்த திட்ட அறிக்கையை சுதந்திரமான அல்லது மூன்றாம் நபர் ஆய்வுக்கு உட்படுத்த தயாரா என்று கேள்வியில் கேட்கப்பட்டது. இது பற்றி ஒரு வார்த்தையும் சொல்லாமல் தவிர்க்கப்பட்டிருக்கிறது.

**கோவையையும் மதுரையையும் அவமதிக்கும் ஆணவம்!**

தனது பதிலில் வரிக்கு வரி, வார்த்தைக்கு வார்த்தை தமிழ்நாட்டின் மான்செஸ்டரான கோவையையும், கோயில் நகரமான மதுரையையும் அவமதித்திருக்கிறது ஒன்றிய அரசு. இந்த இரண்டு நகரங்களும் பொருளாதார அளவில் பல மடங்கு முன்னேற்றம் கண்டு வருகின்றன. தமிழ்நாடு அரசின் தனித்த, தெளிவான திட்டங்களின் வாயிலாக இது நடந்தேறி வருகிறது.

இப்படியிருக்க, தனது பதிலில் கோவை, மதுரையில் இவ்வளவு பேரெல்லாம் மெட்ரோவில் பயணிக்க மாட்டார்கள், இந்த நகரங்களுக்கு பேருந்தே போதுமானது என்று திரும்பத் திரும்பச் சொல்கிறது ஒன்றிய அரசு. இது, தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் ஜிடிபிக்கு தங்களின் உழைப்பின் மூலம் முக்கியப் பங்கு அளிக்கும் கோவை, மதுரை மக்களை அவமதிக்கும் செயல். மேலும், இந்நகர மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மெட்ரோவுக்கான DPRயை தயாரித்த உள்ளாட்சி அமைப்புகளின் பணிநேர்மையையும் அவமதிக்கும் போக்கு.

ஒன்றிய அரசுக்கு தமிழ்நாட்டில் இருக்கும் அத்தனை மக்களும் ஒரே வரியைத்தான் உரக்கச் சொல்கிறார்கள். இந்தியாவில் இன்றைய தேதிக்கு மெட்ரோவுக்கு தகுதியான முதன்மை நகரங்கள் கோவையும் மதுரையுமே. ஒன்றிய அரசே விரைந்து செயல்படு.

இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்து பேசினார்.

# நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் நல உதவிகள் வழங்கல்!

நாமக்கல், டிச.14-

தமிழ்நாடு துணை முதலமைச்சரும்,கழக இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளினை முன்னிட்டு கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் ஆலோசனையின்படி, நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் எற்பாட்டில் சேந்தமங்கலம் பேரூர் கழகத்தில் காந்திபுரம் வார்டு எண் 4, 6 ஆகிய பகுதிகளில் உள்ள கழக நிர்வாகிகளுக்கு கழகத்தின் இருவண்ண கருப்பு சிவப்பு வேஷ்டி , சேலை, சட்டை ஆகியவை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சியில் வார்டு கழக செயலாளர்கள் சரவணன், குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பேரூர் கழக செயலாளர் நா.தனபாலன், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சி.ஆனந்த குமார் கலந்து கொண்டு கழகத்தின் இருவண்ண கருப்பு சிவப்பு வேஷ்டி , சேலை, சட்டை ஆகியவற்றை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் மா.கார்த்திக், வார்டு செயலாளர்கள் சரவணன், குமாரசாமி, பேரூராட்சி உறுப்பினர்கள் ராணி, ராஜாமணி, ஒன்றிய பிரதிநிதி மோகன், பேரூர் இளைஞர் அணி துணை அமைப்பாளர் ரபிக், மகளிர் அணி செல்வம்பாள் மற்றும் கழக உடன்பிறப்புகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.




சேலம் கிழக்கு மாவட்டம் ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பாக எண் 155, 156, உள்ளிட்ட வாக்குச்சாவடி முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் எம்.பி., கலந்து கொண்டு என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி என்ற தேர்தல் பரப்புரை குறித்து சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட துணை செயலாளர் கு.சின்னதுரை, மாவட்டப் பொருளாளர் ஆர்.வி.ஸ்ரீராம், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், வடக்கு நகர செயலாளர் பாலசுப்பிரமணியம், மனோகரன், தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் அருண்குமார், ஆவின் செல்வமணி, ராஜேந்திரன், மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் உள்ள பெண்கள்

# எப்பொழுதும் முதலமைச்சருக்கு ஆதரவாகவே இருப்பார்கள்!

## தருமபுரியில் ஆ.மணி எம்.பி. பேட்டி

தருமபுரி, டிச.14-

தருமபுரி மாவட்டம், பச்சமுத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் 2 ஆவது கட்ட விரிவாக்க தொடக்கவிழா காணொலி காட்சி வாயிலாக ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியில் தருமபுரி மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ், மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி ஆகியோர் கலந்து கொண்டு,தருமபுரி மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்பட்ட 63,298 மனுக்களின் மீது தகுதி உள்ள 32,719 பயனாளிகளுக்கு ஏடிஎம் கார்டு மற்றும் உரிமை தொகையை பெறுவதற்கான ஆணையும் வழங்கினர்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த தருமபுரி எம்.பி. ஆ.மணி: தமிழ்நாடு முழுவதும் மகளிர் உரிமை இரண்டாம் கட்டத்தினை இன்று தமிழ்நாடு முதலமைச்சர் விரிவாக்கம் செய்துள்ளார்.

மகளிர் உரிமைத் தொகை நாம் வழங்குவோம் என்று சொன்ன போது அதிமுக உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் மகளிர் உரிமை தொகை வழங்க மாட்டார்கள்,வழங்க முடியாது என கேலி செய்து வந்தனர். தமிழ்நாட்டை பத்தாண்டுகள் ஆட்சி செய்த அ.தி.மு.க., நிதிநிலையை பாதாளத்திற்கு கொண்டு சென்றிருந்தது. அதுபோல் ஒன்றியத்தில் உள்ள பாஜக தமிழ்நாட்டிற்கு கொடுக்க வேண்டிய நிதிகளை வழங்காமல் வஞ்சித்து வருகின்ற இந்த சூழலில், எத்தகைய இடர்பாடுகள் வந்தாலும் மகளிர் மேம்பாடு முக்கியம் என்பதற்காக, 1.31 கோடி பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.



இதனால் தமிழகத்தில் உள்ள பெண்கள் மாதந்தோறும் தமிழ்நாடு முதலமைச்சரின் பெயரை சொல்லி,எனது சகோதரர் வழங்கினார்,எனது அப்பா வழங்கினார் என்று மகிழ்ந்து வருகின்றனர்.

மாதந்தோறும் 15ஆம் தேதி வந்தால் அவர்களது செல்போனுக்கு மகளிர் உரிமைத்தொகை வந்ததற்கான குறுஞ்செய்திகள் வந்து விடுகிறது.

இதனை கண்டு பெண்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து வருகின்றனர்.

மேலும் தமிழ்நாட்டை பின்பற்றி பத்து மாநிலங்களில் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. நாட்டிற்கே முன்னோடியாக நமது திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள பெண்கள் எப்பொழுதும் தமிழ்நாட்டு முதலமைச்சர், கழகதலைவர் அவர்களுக்கு உறுதுணையாகவும் ஆதரவாகவும் இருப்பார்கள் என்று பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி தெரிவித்தார்.








மயிலாடுதுறையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மகளிர்க்கு மாதம் ரூ.1000 கலைஞர் மகளிர் உரிமைத் தொகை பெறுவதற்கான வங்கிப் பற்று அட்டைகளை மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் எஸ்.ஸ்ரீகாந்த் ஆகியோர் வழங்கினார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் பூங்கொடி நகர்மன்ற தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், மாவட்ட கழக துணை செயலாளர் . எஸ்.செல்வமணி, பொதுக்குழு உறுப்பினர் எஸ்.கென்னடி, மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வெடி எஸ்.பாலமுருகன், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணசங்கரிகுமரவேல், குத்தாலம் பேரூராட்சி தலைவர் சங்கீதாமாரியப்பன் மற்றும் பலர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், ஜிஞ்சுப்பள்ளி கிராமத்தில், ரூ.12 கோடியே 85 இலட்சம் மதிப்பில் 9,000 மெ.டன் கொள்ளளவுடன் கட்டப்படவுள்ள மேற்கூரை அமைப்புடன் கூடிய நவீன நெல் சேமிப்பு வளாகத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் மதியழகன், பிரகாஷ் ஆகியோர் தலைமையில் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் பணிகளை துவக்கி வைத்தார். உடன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல பொதுமேலாளர் தணிகாச்சலம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் , மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் அன்பரசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி, கிருஷ்ணகிரி நகர பொறுப்பாளர் அஸ்லாம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.